எனது இலக்கம் T.06/514/CSRP/RT & SR
இலங்கை புகையிரத திணைக்களம்,
புகையிரத தலைமையகம்,
கொழும்பு 10.
2026.06.09

**அனைத்து அமைச்சுக்களின் செயலாளர்கள்**
**மாகாண தலைமை செயலாளர்கள்**
**திணைக்களத் தலைவர்கள்**
**கூட்டுத்தாபன மற்றும் நியதிச் சட்ட முறைச் சபைகளின் தலைவர்கள்**

**அரச உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படுகின்ற சலுகைப் புகையிரத பருவச்சீட்டுக்களை "பிரவேஷ" நிகழ்நிலை முறைமையின் மூலம் வழங்குதல்.**

தாபன கோவையின் **XXVII (தமிழ்)** அத்தியாயத்திற்கிணங்க அரச உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படும் சலுகைப் புகையிரத பருவச்சீட்டுகளாவன 2026.06.09 ஆம் திகதியிலிருந்து நிகழ்நிலை ஊடாக வழங்கப்படவிருக்கின்றன. அது தொடர்பில் இவ் அறிவுறுத்தல்கள் வெளியிடப்படுகின்றன.

02. **அரச நிறுவனங்களை பதிவு செய்தல்**

1.1 தமது நிறுவனத்தில் உள்ள அரச உத்தியோகத்தர்களைச் உறுதிப்படுத்துதல்இ அவர்களின் சலுகைப் பருவச்சீட்டு கோரிக்கைகளுக்கு அனுமதி அளித்தல் மற்றும் புகையிரத திணைக்களத்திற்கு செலுத்த வேண்டிய பண செலுத்தல்களை உறுதிபடுத்தி கொள்ளுதல் தொடர்பில் அனைத்து அரச நிறுவனங்களிற்கும் "பிரவேஷ" நிகழ்நிலை அமைப்பை அணுகுவதற்காக பயனர் உள்நுழைவு(User Logins) முறையொன்று உருவாக்கப்படும்.

1. 2 முதல் சுற்றில் அனைத்து அமைச்சுகள் மற்றும் மாகாண சபைகள் தொடர்பில் "பிரவேஷ" அமைப்பிற்கான நிகழ்நிலை பெறுவழி புகையிரத திணைக்களத்தினால் உருவாக்கப்படும்..

1.3 அமைச்சுக்கள் மற்றும் மாகாண சபைகளின் கீழ் உள்ள நிறுவனங்கள் (மாகாண அமைச்சுக்கள், திணைக்களங்கள், நியதி சட்ட முறைச் சபைகள்) தொடர்பில் நிகழ்நிலை பெறுவழிகளை அமைப்பதற்கான வசதிகள் இந்த அமைப்பு முறையின் ஊடாக ஏற்புடைய அமைச்சுகளுக்கு மற்றும் மாகாண சபைகளுக்கு வழங்கப்படும்.

1.4 அமைச்சுக்கள் மற்றும் மாகாண சபைகளின் கீழ் நிலவுகின்ற நிறுவனங்களின் கீழ் பிராந்திய ரீதியில் செயற்படுகின்ற நிறுவனங்கள் (மாவட்ட செயலகம், மாகாண கல்வி/சுகாதார அலுவலகங்கள் )தொடர்பில் நிகழ்நிலை பெறுவழிகளை உருவாக்கும் வசதிகளை அந் நிறுவனங்களை மேற்பார்வை செய்யும் நிறுவனங்கள் கொண்டுள்ளன

1.5 இம் முறையில் அனைத்து அரச நிறுவனங்களைப் பதிவு செய்தல் மற்றும் நிகழ்நிலை பெறுவழிகளை உருவாக்குதல் அமைச்சுக்கள்/மாகாண சபைகளின் மட்டத்திலிருந்து மேலிருந்து கீழ்நோக்கிய மேற்பார்வை மட்டத்திற்கமைய செயற்படுத்தப்பட வேண்டும்..

1.6 அரச நிறுவனங்களை பதிவு செய்கையில் அந் நிறுவனங்கள் மாகாண சபை நிறுவனமா, நியதிச் சட்டமுறை சபையா என முறையாகப் பதிவு செய்யும் பொறுப்பு அதனை மேற்கொள்ளும் நிறுவனத்தையே சாரும்.

1.7 ஏதேனுமொரு வகையில் சலுகைப் பருவச்சீட்டுகள் வழங்குவதற்கு அதிகாரம் உள்ள நிறுவனம் என்பதை உறுதிப்படுத்த முடியாத நிறுவமொன்றினை பதிவு செய்வது தொடர்பிலான ஆலோனைகளை புகையிரத திணைக்களத்திடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

.

## 02**. சலுகைப் புகையிரத பருவச்சீட்டுக்களை கோருகின்ற புகையிரத பயணிகளை பதிவு செய்தல் ( Passenger Profile Creation)**

2.1 சலுகைப் பருவச்சீட்டுக்களை பெற்றுக்கொள்வதற்காக அனைத்து பயணிகளும் நிகழ்நிலை அமைப்பில் பதிவு செய்தல் வேண்டும். அதற்காக 04 முறைகள் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன.

I. “பிரவேஷ” கைப்பேசி பெறுவழியின் ஊடாகப் பதிவு செய்தல்
II. “பிரவேஷ” இணையத்தள பெறுவழியின் ஊடாகப் பதிவு செய்தல்
III. டிஜிட்டல் புகையிரத நுழைவுச்சீட்டுக்களின் முன்னோடி கருத்திட்டம் செயல்படுத்தப்படுகின்ற புகையிரத நிலைமொன்றிற்குச் சென்று பதிவு செய்து கொள்ளல்.
IV. தாம் பணிபுரியும் நிறுவனத்தின் “பிரவேஷ” அமைப்பின் ஊடாக பதிவு செய்தல்

2.2 பதிவு செய்யப்பட்ட அரச உத்தியோகத்தரொருவர் சலுகைப் பருவச்சீட்டுக்களை பெற்றுக் கொள்ளவேண்டி இருப்பின் அவ் உத்தியோகத்தர் பணிபுரியும் அரச நிறுவனத்தினால் அப் பதிவு செய்யப்பட்ட பயணிகள் பயனர் கணக்கு உறுதி செய்யப்படுதல் வேண்டும்.

## 03. <u>பருவச் சீட்டுக்களுக்கு விண்ணப்பித்தல்</u>

3.1 அரச நிறுவனமொன்றின் கீழ் உறுதிப்படுத்தப்பட்ட பயணிகள் பயனர் சுய விபர கணக்கினால் (Passenger Profile) அரச சலுகைப் பருவச்சீட்டினை விண்ணப்பிப்தற்கான வாய்ப்பு காணப்படுகிறது.

3.2 தாபன கோவையின் ஏற்பாடுகளுக்கமைய கோரப்படுகின்ற சலுகைப் பருவச்சீட்டின் செல்லுபடியாகும் காலமாக 01 மாதம் தொடக்கம் 03 மாதம் வரையான காலப்பகுதிக்கு விண்ணப்பிக்கலாம்.

3.செல்லுபடியாகும் பருவச்சீட்டுக்களை கொள்வனவு செய்வதற்காக அரச உத்தியோகத்தரொருவரின் சலுகை பருவச்சீட்டுக்களுக்கான கோரல் ஏற்புடைய அரச நிறுவனத்தினால் அங்கீகரிக்கப்பட வேண்டும்.

## 4 <u>பருவச்சீட்டுக்கள் தொடர்பில் கட்டணங்களைச் செலுத்துதல்</u>

4.1 நிறுவனத்தால் அங்கீகரிக்கப்பட்ட சலுகைப் பருவச்சீட்டுக்களுக்கான கட்டணமானது மூன்று முறைகளில் செலுத்தப்படலாம்.

I. கோரிக்கை விடுக்கும் அதிகாரியின் கையடக்க தொலைபேசியின் செயலி மூலம் நிகழ்நிலையில் செலுத்தப்படலாம்.
II. " பிரவேஷ " இணையதளத்தின் ஊடாக பயணிகள் பயனர் கணக்கின் மூலம் நிகழ்நிலையில் செலுத்தப்படலாம்
III. டிஜிட்டல் புகையிரத நுழைவுச்சீட்டு முன்னோடித் திட்டம் செயல்படுத்தப்படும் புகையிரத நிலையமொன்றின் வழியாக செலுத்தப்படலாம் (கொழும்பு மற்றும் மருதானை புகையிரத நிலையங்கள் உட்பட).

## 5. செல்லுபடியாகும் பருவச்சீட்டொன்றினை பயன்படுத்துவதன் மூலம் புகையிரத சேவையைப் பயன்படுத்துதல்

5.1 புகையிரதத்தின் மூலம் பயணிக்கையில் செல்லுபடியாகும் சலுகைப் பருவச்சீட்டினை எந்நேரமும் தன்வசம் வைத்திருக்க வேண்டும் என்பதோடு புகையிரத சேவையைப் பயன்படுத்தும் போது புகையிரத உத்தியோகத்தரொருவர் கேட்கும் எந்நேரத்திலும் அதனைச் சமர்ப்பிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

5.2 செல்லுபடியாகும் பருவச்சீட்டை தங்களது கையடக்க தொலைபேசியில் உள்ள கைபேசி செயலி மூலம் சமர்ப்பிப்பதற்கான வாய்ப்பு காணப்படுகிறது.

6.3 கையடக்க தொலைபேசி செயலி இல்லாத உத்தியோகத்தர்கள் கட்டணம் செலுத்திப் பெற்ற செல்லுபடியாகும் பருவச்சீட்டின் அச்சிடப்பட்ட நகலைச் முன்வைக்க வேண்டும்.

6.4 செல்லுபடியாகும் சலுகை பருவச்சீட்டொன்றினை முன்வைக்க முடியாத பட்சத்தில் அது தொடர்பில் புகையிரத கட்டளைச் சட்டத்தின் .ஏற்பாடுகளுக்கு இணங்க சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

6. **<u>அரசு நிறுவனங்களினால் ஏற்கப்படுகின்ற சலுகை பணத்தினை புகையிரத திணைக்களத்தின் கணக்கில் வரவு வைத்தல்</u>**

6.1 சலுகைப் புகையிரத பருவச்சீட்டுக்களை வழங்குவதன் பொருட்டு மாகாண சபை நிறுவனங்கள்இ சுவாதீன ஆணைக்குழுக்கள், நியாச் சட்ட முறைச் சபைகளினால் ஏற்கப்படுகின்ற சலுகைப் பணமானது (25%) காசோலை மூலம் புகையிரத திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருப்பதை அமைப்பில் உறுதி செய்தல் வேண்டும்.

6.2 அவ் அனைத்து தொகையும் அடுத்த மாதத்தின் 15 ஆம் தேதிக்கு முன்னர் ஏற்புடைய நிறுவனங்களால் புகையிரத திணைக்களத்திற்கு செலுத்தி முடிக்கப்பட வேண்டும்.

6.3 அரச சலுகை பணத்தினை புகையிரத திணைக்களத்திற்கு வரவு வைக்க தவறும் நிறுவனங்களின் உத்தியோகத்தர்களுக்கான பருவச்சீட்டுக்கள் வழங்கப்படுவதற்கான வசதிகளை நிறுத்துவதற்கான வாய்ப்பு புகையிரத திணைக்களத்திற்கு உள்ளது.

7. **<u>நிகழ்நிலை அமைப்பைப் பயன்படுத்துவதற்கான அறிவுரைகள் செயல்பாடுகள் மற்றும் தொழில்நுட்ப உதவிக்கான வழிமுறைகள்</u>**

7.1 அரசு நிறுவனங்கள் மற்றும் அரச உத்தியோகத்தர்கள் "பிரவேஷ" நிகழ்நிலை அமைப்பிற்கு உள்நுழைவதற்கான வழிமுறைகள் பின்னிணைப்புக்களின் மூலம் காட்டப்பட்டுள்ளன. www.railway.gov.lk எனும் மின்னணு பெறுவழியின் மூலம் அந்த வழிமுறைகளைப் பெறுவதற்கான வாய்ப்பு காணப்படுகிறது. மேலும் அந்த அமைப்பை எவ்வாறு பயன்படுத்துவது என்பதற்கான காணொளி வழிகாட்டியையும் அதன் ஊடாக பெற்றுக்கொள்ளலாம்.

7.2 அமைப்பினை பயன்படுத்துவதற்கு தேவையான தொழிநுட்ப அறிவுரைகளை கீழே காணப்படுகின்ற தொலைபேசி இலக்கத்தின் ஊடாக புகையிரத திணைக்களத்தின் தகவல் தொழிநுட்ப பிரிவுடன் தொடர்பு கொள்வதன் மூலம் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்பு காணப்படுகிறது.

<u>0112302719</u>

<u>1971</u>

இணைப்பு

1. அரச நிறுவனங்கள் ”பிரவேஷ” அமைப்பில் பதிவு செய்து கொள்வதற்கு மற்றும் சலுகை பருவச்சீட்டுக்களை முகாமைத்துவப்படுத்துவதற்கு தேவையான அறிவுரைகள்
2. அரச உத்தியோகத்தரொருவருக்கு சலுகை பருவச்சீட்டுக்களை பெற்றுக் கொள்வதற்கு தேவையான அறிவுரைகள்

கையொப்பமிட்டது
ரவிந்திர பத்மப்பிரிய
புகையிரத பொது முகாமையாளர்

பிரதி -

1. கணக்காய்வாளர் தலைமையாதிபதி